[1982 பிப்ரவரி 16

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவதன் காரணமாக, அரசுக்கு ஏற்படக்கூடிய செலவு என்ன இதை ஈடுசெய்ய மத்திய அரசிடமிருந்தோ அல்லது ரயில்வே துறையிடமிருந்தோ ஏதாவது ஈடுதொகை பெறப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நீண்டகாலமாகவே மூர் மார்க்கெட் அருகில் இருக்கின்ற இந்த மிருகக்காட்சிசாலையை மாற்ற வேண்டு மென்று சென்னை மாநகராட்சியிடம் திட்டமிருந்தது. அரசிடமும்திட்டமிருந்தது. பொது மக்களும் அதை வற்புறுத்தி கொண்டு வந்தார்கள். நல்ல வேளையாக, ரயில்வே துறையினர் அந்த இடத்தை வேண்டுமென்று கேட்டதனால், அந்த நிலத் திற்கு அவர்கள் நஷ்ட ஈடுதொகையை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த மிருகக்காட்சிசாலையை மாற்றுவதற்கென தனியாக தொகை அவர்கள் வழங்கவில்லை.

1979 முதல் 1981 வரை தமிழ்நாடு அரசு தயாரித்த செய்திப்படங்கள்

*வினா எண் 186—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு 1979–1980, 1980-1981-ல் எத்தனை செய்திப்படங்கள் எவ்வளவு செலவில் தயாரித்து வெளியிடப்பட்டன?

(ஆ) 1981–82-ல் எத்தனை படங்கள் தயாரிக்க உத்தேசம்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) 1979-80, 1980-81 ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட படங்கள் செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள்:

ஆண்டு.	படம்.	எண்ணிக்கை.	செலவழிக்கப்பட்ட தொகை.
1979—80	செய்திப்படங்கள்	14	ரூ. 11,48,600.00
	விளக்கப்படங்கள்	6	ரூ. 1,57,623.20
1980—81	செய்திப்படங்கள்	13	ரூ. 9,49,600.00
	விளக்கப்படங்கள்	2	ரூ. 82,768.37

1982 பிப்ரவரி 16]

(ஆ) 1981-82-ல் உத்தேசமாக தயாரிக்கப்படவிருக்கும் படங்கள் பற்றிய விவரம்:

படம்.	எண்ணிக்கை.
செய்திப்படம்	18
விளக்கப்படம்	7

(முற்பகல் 9.30)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்திப்படங்கள் அல்லது விளக்கப்படங்கள் என்று அறிவித்தார்கள். செய்திப்படங்கள் என்று சொல்லும்போது அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள்தான் செய்திப் படங்களா? விளக்கப்படங்கள் என்றால் என்ன விளக்கப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: செய்திப் படங்கள் என்பது அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்கிற அந்த நிகழ்ச்சிகள் என்று பொருள் அல்ல. அரசினுடைய செயல் திட்டங்கள், ஆக்கப்பணிகள், பல்வேறு முக்கியமான நிகழ்ச்சிகள் மத்திய அரசு அல்லது அமைச்சர்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் எவை மக்களுக்கு முக்கியம் என்று கருதப்படுகிறதோ அவை செய்திப்படங்களாகும். விளக்கப்படங்கள் என்பது சில துறை களுடைய கொள்கைகளை, திட்டங்களைத் தனியாக மக்களுக்கு விளக்குவது. விவசாயத்துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை போன்ற துறைகளைச் சார்ந்த விவரங்களை மக்களுக்கு அளிக்க வேண்டுமென்ற அந்தக் காரணத்தின் அடிப்படையில் எடுக்கப் படுவது விளக்கப்படங்கள்.

திரு. கோவைத்தம்பி: செய்தித் துறை விளக்கப் படங்கள் என்று பல்வேறு துறைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சினிமாத் துறையைக் குறித்து ஒரு விளக்கப் படம் எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? சினிமாத் துறையில் எருமை மாடு என்று எழுதுகிற எருமை புத்தி எழுத் தாளர்கள் இருப்பதால் அந்தத் துறையில் இப்படித்தான் சினிமா எடுக்க வேண்டும். இளைஞர்களை, மாணவர்களைக் கெடுக்காது எப்படி எடுக்கவேண்டுமென்று விளக்கப்படம் எடுப்பார்களா?

மாண்புமிகு ஆர். எம். வீரப்பன்: சினிமாத்துறை எப்படி இருக்கவேண்டுமென்று விளக்கப்படம் எடுக்க முடியாது. சினிமா படங்களில் வருகிற கருத்துக்கள் ஆட்சேபனைக்குரியதாக இல்லையா என்பதை ஆராய தணிக்கை போர்டு இருக்கிறது. அது பொது மக்கள் பார்க்கக்கூடிய படம் என்று பார்த்து சான்றிதழ் வழங்குகிறார்கள். அவர்கள்தான் அதைப் பார்த்து பரிசிலிக்க வேண்டும்.

[1982 பிப்ரவரி 16

திரு பெ. சு. திருவேங்கடம்: மத்திய அரசு வெளியிடுற செய்திப் படங்களில் கூட எதிர்க்கட்சி மாநாடுகள், மற்றைய நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எல்லா அரசியல் கட்சிகளில் மாநாடுகள் நடக்கின்றன. குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் திருச்செந்தூர் செல்லும் நெடும் பயணம், ஆளும்கட்சி செல்ல இருக்கும் நெடும் பயணம் போன்றவற்றையும் செய்திப்படங்களாக எடுத்துக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மத்திய அரசினுடைய செய்தித் துறை எந்த அடிப்படையில் அவர்களுடைய படங்களைத் தயாரிக்கிறார்கள் என்பது பற்றி அரசிடத்தில் தகவல் இல்லை. தமிழக அரசைப் பொறுத்தவரை நீண்ட நெடுங் காலமாக எந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றனவோ அந்த முறைகள்தான் இப்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

திரு. எ. சி. சண்முகம்: அரசு செய்திப் படங்களை இவ்வளவு செலவில் தயாரித்தும் பல தியேட்டர்களில் காட்சிகளுக்கு முன் காட்டுவதில்லை. அவசியம் அந்தப் படங்களைக் காட்ட வேண்டுமென்று உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்தக் குற்றச்சாட்டு பரவலாக இப்போது வந்து கொண்டிருக்கிறது. நாம் எடுக்கிற செய்திப் படங்களை மத்திய அரசினுடைய பிலிம் நியூஸ் டிவிஷன் மூலந்தான் அரங்குகளுக்கு வழங்கி வருகிறோம். திரைப்படங்களுக்கு வழங்குகின்ற உரிமத்திலேயே இந்தத் திரைப் படங்களைக் காட்ட வேண்டுமென்பது முக்கியமான விதி. பல நேரங்களில் பல அரங்குகளின் சொந்தக்காரர்கள் செலவு கருதியோ, நேரத்தைக் கருதியோ இப்படிப்பட்ட செய்திப் படங்களைக் காட்டுவதில்லை என்ற புகார் வந்துக் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்கவும் முறையாகச் செய்திப் படங்கள் காட்டப் படவும் காட்டத் தவறினால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: ஆளுநர் உரை நிகழ்ச்சிகள், நிதிநிலை அறிக்கை நிகழ்ச்சிகள் போன்ற செய்திப்படங்களை எடுக்கும் போது ஆளும் கட்சிப் பகுதியில் க்ளோஸ் அப் ஆக காட்டப்படுகிறது .எதிர்த் தரப்பு வரிசையை அவ்வாறு காட்டுவதில்லை. அப்படி காட்டினாலும் லாங் ஷாட்டில்தான் காட்டப்படுகிறது எங்களையும் க்ளோஸ் அப்பில் காட்ட செய்தித் துறை முன்வருமா?

1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சட்டமன்றத்தின் மொத்தத் தோற்றத்தைக் காட்டுகிற நேரத்தில் இந்த அவை முழுவதும் தெரிய வேண்டுமென்ற அவசியத்தில் எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல் ஆளுநர் உரை என்று சொன்னால் ஆளுநர் படம் முக்கியமாகத் தெரிய வேண்டும். எதைச் சொல்ல வேண்டும், எதை விளக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதை விளக்கியாக வேண்டும். ஆகவே ஆளுநர் உரையின்போது மற்றவர்களை எப்படிக் காட்டவேண்டுமோ அந்த அளவுக்கு படம் எடுக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : சமீபத்தில் இந்திய அரசின் செய்திப்படத் துறை வெளியிட்ட இரண்டு படங்களை நான் பார்த்தேன். ஓ. என். ஜி. சி. (ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கமிஷன் சம்பந்தமாக) ஆராய்ச்சி பற்றிய படத்தையும் அதே போல் கவிஞர் இக்பால் அவர்களின் வரலாற்றுப் படத்தையும் கலரில் காட்டினார்கள். அது பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது. தமிழக அரசும் அதைப்போன்று கலரிலே செய்திப் படங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இப்போது கருப்பு வெள்ளை படத்தைப் பார்ப்பதற்கே மக்கள் பின்வாங்குகிற சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருக்கிறது. ஆகவே சில விளம்பரப் படங்கள் எல்லாம்கூட மிக அழகாகவும் கவர்ச்சிகரமான முறையிலேயும் தொழில் நுட்பங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கின்ற வகையிலேயும் இன்றைக்கு வண்ணத்திலே எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் மக்கள் தெரிந்துகொள்ளக்கூடிய செய்திப்படங்கள் கவர்ச்சிகரமான முறையிலேயும் வண்ணத்திலேயும் எடுக்கப் படுவதுதான் நியாயம். ஆனால் அதற்காகும் செலவைப் பார்த்தால் அதிகமாக இருக்கிறது. மிக முக்கியமான மக்களுக்குப் பயன்படுகின்ற சில நிகழ்ச்சிகளையாவது கவர்ச்சி கரமாக வண்ணப் படத்திலே எடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மயில்களைப் பாதுகாக்கும் திட்டம்.

* வினா எண் 187 திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தேசிய பறவையான மயிலைப் பாதுகாக்கவும் இனப் பெருக்கம் செய்யவும் என்னென்ன திட்டங்கள் ; க்கப் பட்டிருக்கின்றன?